பக்தாமர் ஸ்தோத்திரம்.

O-,1M5D, P
N20
179423

3

198

உ

குமரன்றுணை.

உலகெங்கும் புகழ்பெற்ற

தமிழ்நாடகத்

தலைமையாசிரியர்

தூத்துக்குடி

# T.T.சங்கரதாஸ்

சுவாமி
அவர்கள்
இயற்றிய
பரமானந்தப்
பக்திரஸக்

# கீர்த்தனை

PRINTED AT THE
...ANMONY VILAS PRESS MADURA.
...GHT 1920 PRICE AS 8.

C, I MSD, P
N20
179423

உ

சிவமயம்.

குமரன்றுணை

இந்தியா முதலிய இடங்களில்
வித்துவான்களால் நன்கு மதிக்கப்பெற்றவரும்
தமிழ்நாடகத் தலைமை நாடகாசிரியருமான
தூத்துக்குடி

# T. T. சங்கரதாஸ்

சுவாமியவர்களியற்றிய

பரமானந்தப்

# பக்திரஸக்கீர்த்தனை.

இது
மதுரை தாசில்தார் பள்ளிவாசல்தெரு

## K. மாயாண்டி பிள்ளையால்

தமது

மதுரை வடக்குமாசிவீதி
மனோன்மணி விலாஸ் அச்சியந்திர சாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

இதன்விலை] 1920. [அணா 8.

REGISTERED COPY RIGHT.

OFFIC 8- JAN 192 MADR

179473

OFFICE OF THE [illegible]
8 - JAN 1921
MADRAS.



# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத் ததிபர்களுக்கும், புத்தக வியாபாரிகளுக்கும், மற்றுமுள்ளவர்களுக்குந் தெரிவித்துக்கொள்வதாவது:— தூத்துக்குடி **T. T.** சங்கரதாஸ் சுவாமியவர்களால் இயற்றப்பெற்றுள்ள இக்கீர்த்தனைகளை **"பரமானந்தப் பக்திரஸக் கீர்த்தனை"** என்ற பெயருடன் என்னால் அச்சிட்டு ரிஜிஸ்தர் செய்யப்பெற்றிருப்பதால், இதனை பிறர் அச்சிடக்கூடாதென்றும், அச்சிட்டால் நான் கோரும் நஷ்டத்திற்குக் கடமைப்பட்டவர்களாவாரென்றும் அறிவிக்கலாயிற்று.

மனோன்மணிவிலாசம்பிரஸ்
மதுரை.

இப்படிக்கு
**K.** மாயாண்டிபிள்ளை

உ

வேலுமயிலுந்துணை.

# முகவுரை.

கீர்த்தனை என்பது வடமொழிச் சொல்லாயினும், தமிழில் பாட்டென்னுஞ்சொல்லோடு வேற்றுமையின்றிப்பயின்று தொன்று தொட்டு வழங்கிவருகிறது. பாட்டென்னுந் தமிழ்ச் சொல்லோ இசைத்தமிழின் பாகுபாட்டை யுணர்த்தும் தேவபாணி என்பது முன்னோர் ஆட்சி. இசையின்வழியே தேவதோத்திரமும், காமச்சுவைப்பெருமையும் விளங்கப் பாடு மிருவகை ஆசிரியருளர். அதனால் பக்திரஸக்கீர்த்தனை காமரஸக்கீர்த்தனை எனக்கீர்த்தனை இருவகைப்பட்டு நடக்குமென்பர் மேலோர். எட்டையபுரம் சமஸ்தான வித்துவானாகிய ஸ்ரீலஸ்ரீ கடிகைமுத்துப்புலவ ரென்பாரும் காமரசமஞ்சரி என்னும் நூலியற்றிய நெறியும் இவ்விருவகையில் ஒன்றாகிய பின்வகையின்பாற்பட்டதேயாம். சமயாசிரியர், ஆழ்வாராதியர், தேவார திருவாசக திருவாய்மொழிப் பிரபந்தங்கள் எல்லாந் தேவதோத்திர மென்னும் வகையைச் சேர்ந்தனவான இசைத்தமிழே. அதனோடு ஒருங்கெண்ணப்படாவாயினும், தாளம்படவரும் சந்தச்செய்யுள், சிந்து, கும்மி, பல்லவ உறுப்புள்ள பாடல்களையும் இசையின்பாற்சேர்த்திவகைப்படுத்துதல் மரபாயின.

தற்காலம் இசைத்தமிழின் இலக்கணநூல் காணக்கிடைக்காதாயினும் அங்கங்கு சிதறிப் பலநூல்களிலும் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்ட சிற்சில சூத்திரங்களையும் வாக்கியங்களையும் ஆதாரமாகக்கொண்டு இசைத்தமிழின் பாகுபாடு இத்தன்மையன எனச் சங்ககாலப்புலவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனரென்று முன்னூல் உரையாசிரியர்கள் ஒருவகையாக நியமித்துச் செல்கின்றனர். அந்நியமங்கொண்டு யூகிப்பார்க்கு இசைத்தமிழுருவந் தென்படாதிராது. பதங்களென்றும், ஜாவளிகளென்றும், கீர்த்தனைகளென்றும், சிந்துகளென்றும், கும்மிகளென்றும் இக்காலம் வழங்கி வருவனவெல்லாம் இதன்பாற்பட்டனவேயாம். இம்முறையில் தேவதோத்திரம் பாடுவோர் சிலர், காமச்சுவை பொருந்திய காமரஸக் கீர்த்தனை பாடுவோர் பலர். என்றாலும் காமச்சுவையின்

பொருளை யறியாது பாடுவோரே மிகுதியுற்றவர். பாடல் என்பதற்குப் பொருள் தெரியாதவரும் பாடுங்கால் மிதுவாகையாலும் இப்படிப் பாடியதற்கு விதியென்ன என்று கேட்போரில்லாத நிலையுடைமையினாலும் எவரும் பாடிப் பலவழியிலும் வெளிப்படுத்தி இசைத்தமிழென்னும் பகுதியை மிகுதியும் ஆபாசப்படுத்தலாயினர்.

அறிவறிந்த முதியரும் அவைகளை அருவருத்தொழிந்தன ரன்றி அவைகளைச்சிக்கறுத்துச் செறிவுபடுத்தப் புகுதலில்லாதவராயினர். அதுகாரணமாக இக்காலத்தில் பக்திரஸக் கீர்த்தனைகளும் பல தோன்றிச் சந்தவழுவும் தாளச்சோர்வுமுடைய பாடல்கள் மலிவாயின. நிற்க, தற்காலம் சில மேதாவிகளாலே பக்திரஸக்கீர்த்தனையென்று வெளியிடலான புத்தகங்களும் பயன்றருவனவாகக் காணப்படுகின்றன. இருவகைகளையுங் கண்ணுற்றபின்னர் கற்றோர்கண்டு களிகூர மற்றோர் மாணுக்கர் நிலையை நாமடைந்து வித்தைப்பயிற்சியைப் பெருக்கிக்கொள்ளவேண்டுமென ஆர்வமிக இப்பாடல்களைத் தேவபிரார்த்தனையாக அற்பணஞ்செய்யப் புகுந்தேன். இப்புத்தகத்தில் உள்ள பாடல்கள் யாவும் தற்கால ரீதிக்கொப்ப அநேகமாக நாடகக் கம்பெனிகளில் வேஷதாரிகளாலே பாடிவருகின்ற இந்துஸ்தான், பாரீசு வர்னமெட்டு முதலிய வகைகளைப் பொருந்தியனவாகும். அதற்குக் காரணம் புத்தகத்தைக் கையிலெடுத்தவர் மற்றுருபகாரத்தைக் கருதாமல் கேள்விஞானத்தால் முன்னுணர்ந்திருக்கும் பாடலின் போக்குப்படி, படிக்கத்தானே இப்பாட லவ்வழியி லிசைந்துநிற்குமென்பதே. இதற்காகவே ஒவ்வொரு பாடலின் தலைப்பிலே பழைய வர்னமெட்டுக்களின் முதலடியையும் பொறித்திருக்கிறேன். ஆகையினாலே இப்புத்தகத்தைக் காண்போர் இசையின்போக்கும் ஈசுரமகிமைப் பிரதாபமும் எளிதிலுணர்ந்து இகபர சாதன பலனை யடைவாராக.

மதுரை, தத்துவ மீனலோசனி வித்வ பால சபா.

நாடகாசிரியன்
தூ. தா. சங்கரதாஸ்.

உ

ஸ்ரீ மீனாக்ஷி துணை.

# பரமானந்தப்

# பக்திரஸக் கீர்த்தனை.

## விநாயகர் துதி.

### காப்பு - வெண்பா.

தத்துவத்தி னுண்மைத் தனிப்பொருளைத் தந்துதவும்
பத்திரஸக் கீர்த்தனைக்குப் பண்ணருளும்—நத்தி
உரிமைபெற வேண்டுபவ ருள்ளத்து ணிற்குங்
கரிமுகனார் செம்பொற் கழல்.

## விநாயகர்மீது

இளம்பிராயத்திலே என்ற வர்ணமெட்டு.

இ-மோகனம் தா-ரூபகம்.

பல்லவி

தும்பிக்கைத்தேவன் துணை இந்தத்
தொல்லுலகில் வேறு இல்லையென்று கூறு (தும்)

அநுபல்லவி

நம்பித் திருவடி நாளுந் துதிப்பார்க்கு
நலமுட னருள்தரும் நாதன்
புலன்வெல மதிபுகல் போதன் (தும்)

சரணங்கள்

ஔவைக்குக் கயி லாயத்தைக் காட்டினேன்
அன்புத்தம்பிருக னுக்குப்பெண்கூட்டினேன்
அற்புதன் கற்பிதன் பொற்பதன்
அண்டிநின்றவர் துன்பமென்பத
கன்றுசென்றிட நன்குவந்தருள் (தும்)

கொம்பொன்றொடித்துப்பா ரதத்தைத் தீட்டினேன்
குட்டிய ராவண னைமுன்பு வாட்டினேன்
கோரியே நேரிலே சேருவார்
குற்ற மகற்றி விடுப்பவன்
நற்ற யவுற்று மடுப்பவன் (தும்)

நாரணன் சக்கரம் பக்ஷண மென்றவன்
நாடக மன்னே ை டக்கண்டு நின்றவன்
நச்சுவோர் இச்சைபோல் வைச்சுளோன்
நாமவ னைமம தேமொழி
வோமிது வேதொழி லாம்வழி (தும்)

கண்களாயிரம் வேணுமே என்றமெட்டு.

இ-கமாசு தா-ஆதி.

பல்லவி

மதியளித் தருள்புரிவாய் மாமுகதேவா (மதி)

அநுபல்லவி

கதியுனேயலதில்லை கருணைமழைசொரிவாய் (மதி)

சரணங்கள்

நதியணி சிவனந்த நாளிலீன் றருளிய—நாதர்
கணநாதா கணநாதா கணநாதா
நாலாகியபுய பராவாக்ராரா
கூலாதயவுசெய் சீலா இதுததி (மதி)

சிதரன் திகிரியை ஆதியில்வடையெனத்—தின்றோய்
நின்றுதின்றோய் நின்றுதின்றோய் நின்றுதின்றோய்
தின்றவ னடமது கண்டபி னகமகிழ்
கொண்டரு ளியவனே நம்பின னிதுததி (மதி)

கொம்பொடித்துப்பாரதங் கோட்டினிலெழுதிய-கோவே
உயர் கோவே உயர் கோவே உயர் கோவே
கொற்றவ உனதிரு பத்மபதமதைய
நத்தியளனைநினை வுற்றருளிதுதகி (மதி)

என்னவிலேவேண்டுமிதற்கு என்றமெட்டு.

இ-பியாக் தா-ஆதி.

பல்லவி

தந்திமுகத் தெந்தை பதமே தருமிதமே

அநுபல்லவி

சிந்தையில் துன்பமேதுக்கு செப்புகிறேனுனக்கு (தந்)

சரணங்கள்

அந்தநாளிலே அமரர் அச்சமுற்று வாடிநொந்து
ஐயனேநீயேகிருபை செய்யவேணுமென்றுவந்து

கந்தமல ரைச்சொரிந்து காலிணையி லேவிழுந்து
காத்திடெனக்காத்தவனைத்தோத்திரஞ்செய்நீபணிந்து(த)
சீதக்கள பஅகவல் செப்பியஔ வையாருக்கு
சீக்கிரம்நா காபரணத் தேவன்மலை சேர்வதற்கு
மாதயவு செய்வானந்த வாறுநா மடைவதற்கு
வாழ்த்திநின்று லட்டியேது வந்தருளு வானமக்கு (தங்)
பண்டுசெய்த எண்ணமற்ற பாவவினையாவும் நீக்கும்
பாரினிலேமேன்மையானபக்திநிலையையுண்டாக்கும்
பெண்டுபிள்ளைமண்பொன்னாசைப் பித்தமென்னும்-
[நோயைப்போக்கும்
பேணியெந்த நாளும்மேலாம் பேரின்பங்கொ டுத்துக்காக்கும் (தங்)

## மீனாக்ஷியம்பிகைமீது

கருக்கடைதெரியாத என்றமெட்டு.

இ-சாவேரி தா-ரூபகம்.

பல்லவி

உன்பாதமேகெதியல்லால் என்பாவவினையைத்தீர்க்க
ஓதுவாய் வேறொருகெதி யுண்டோ அன்னையே (உன்)

அநுபல்லவி

அன்பாளர்கள் பாடலுக்கு
முன்பாக அருள்செய்திட்டாய்
ஆட்சி செய்யுமதுரை மீ
னாக்ஷி யென்னையேன் கைவிட்டாய் (உன்)

சரணம்

பஞ்சகிர்த்தியமுனது பர்த்தாயா
ராலேசெய்கின்ருர்
பாவபுண்ணியவினை பகுத்தெவ்
விதமளிக்கின்ருர்
கொஞ்சமாயினுமுன்னருள் கொண்டல்லா
லார்பிழைக்கின்ருர்
கோபமென்மேல்கொள்வாயாகில் கூறுவா
யார்துணைநின்ருர் (உன்)

## அதிபதியரிச்சந்திரன் என்றமெட்டு.

இ-காம்போதி தா-ரூபகம்.

பல்லவி

தாயேமீனுக்ஷியுன் தனையன்வேலனுக்கென்மேல்
தயவுசெய்யச் சொல்லம்மா. (தா)

அநுபல்லவி

ஆயேன் பலகலைகள் அறிவிலேன் என்ருலும்
அதிகொடுமையான அடஞ்செய் தூநின்ருலும் (தா)

சரணங்கள்

பெற்ற அன்னைபிதாவை பேதையிழந்துவிட்டேன்
பிரியநேசர்சுற்றத்தால் பெரும்அவஸ்தைகள்பட்டேன்
குற்றந்தினம்புரிந்து குடியால்மயங்கிக்கெட்டேன்
கொஞ்சமேனுங்கடைக்கண் கொள்ளுன்காலைக்கும்பிட்டேன் (தா)

அறிவில்லாப்பிராயத்தில் அவனுக்குடிமையானேன்
அவன்வாழிடங்கள்தேடி ஆண்டியாகவும்போனேன்
முநியாக்கொண்டோனெனக்கு மோசங்களைச்செய்வானேன்
முறைபாடுகேட்டீயும் முகம்பாராதிருப்பானேன் (தா)

பாட்டவனுக்கும் வேற்கும் மயிலுக்கும் பலபாடி
பழனிஸ்தலத்திலே பாற்காவடி தூக்கிஆடி
நாட்டம்நீர் ஊற்றெழுக நாளுமெலிந்துவாடி
நானழு வதைநீயிந் நாளிலவனுக்கோடி (தா)

## முருகப்பிரான்மீது

### சூழிப்பு.

தந்தான தந்த தான
தந்தான தந்த தான
தந்தான தந்த தான தனதானா.

விந்தோடு பண்டு நாத
முஞ்சேர வந்த தேக
மின்போலு மென்ற சேதி யுணராதே

விஞ்சாதி பன் கெடாத.
வன்பாவ னென்று நாளும்
விண்டேய லைந்து மாயை யதனாலே

சிந்தாகு லங்கண் மீறி
நன்றேபு ரிந்தி டாது
திண்டாடு கின்ற மூட னெதிரேநீ

திந்தாதி திந்த தாதீ
யென்ருேடி நின்ற தோகை
திண்டோளி லங்கு வேலி ளுடுவோராய்
மந்தாநி லங்க டாவி
யன்ருேர்க ரும்பு நாடி
வண்டேவு வஞ்சன் மாள நுதலாலே
வம்பாடு கொன்றை மாலை
கொண்டார்ம கிழ்ந்து போதம்
வந்தேசொ லென்றபோது மகிழ்வாலே
இந்தேறு சந்த்ர வேணி
யுன்பாத கஞ்ச மாக
வின்பான மந்த்ர மோது குருநாதா
இங்கோடி வந்து காணு
மன்பாளர் துன்ப மேகு
மென்பால தண்ட பாணி முருகோனே.

பெண்ணென எண்ணுதே ராமனே என்றமெட்டு.

இ-பூரிகல்யாணி தா-ரூபகம்.

கண்ணிகள்

கொஞ்சமேனும் என்சொல் காதுக்கு
நீ=கொள்ளா திருப்பதும் ஏதுக்கு
நஞ்சமுண்ட நீல கண்டனுக்கு மன்று
ஞானமோதுங்குரு நாதாகுகா இன்று (கொ)

கொண்ட பூஜையைவிட்டே னென்றோ
என்மேல்நீ-கோபமுற்று தீதுவும் நன்றோ
பண்டுசெய்த வினைப் பாவமிலைதானோ
பாலன் பிழையைப் பொறுக்கா ததுமேனோ (கொ)

தாசன்குற்றத்தை முற்றுந் தள்ளு
இணைத்—தாளிலேஎன்னைச் சேர்த்துக் கொள்ளு
ஆசா பாசத்தால் அவதி யடைந்தேனே
ஆறுமு காஉன்னை நம்பி யிருந்தேனே (கொ)

## மீனாக்ஷியம்பிகைமீது

ஆரபரஹா என்ற இந்துஸ்தான்மெட்டு.

இ-ஆனந்தபைரவி தா-ஆதி.

பல்லவி

பாதபத்பமே நான்
பாடநீ வரந்தருவாய் (பாத)

அநுபல்லவி

பாரரசாளுமரசி ஆரணிவேணிசரசி (பாத)

சரணங்கள்

ஆதிமத்யாந்த ரகிதிமீனாக்ஷி
அகில புவனகா ரணிசர்வ சாக்ஷி
ஜோதி உருவேதுரீ யாதீத சூட்சி
சுத்தஞானி பத்திக்கப்பால் சித்தம்
[வைப்பார் காணுங்காக்ஷி (பாத)

ஜென்மவிடாயின் வெப்பத் தீப்பிணி தணியும்
சீக்கிரத்தி லடைந்து சேவித்துப் பணியும்
நன்மையுண்டாகுமென்று நான்மறை துணியும்
நாதமுழங்குஞ்சிலம்பு பாதசரங்களணியும் (பா)

மாயையுன்னாலேவந்த மலப்புழுக்கூடு
மாற்றிப்பிறக்கலான வகையறிவோடு
சேயையடிவணங்கித் தினம்பட்டபாடு
தேவியறிவாயீடேற நீ இருந்தென்வாக்கினூடு (பா)

இன்னமுங் காணேனே என்ற மெட்டு.

இ-செஞ்சுருட்டி தா-சாப்பு.

பல்லவி

மீனாக்ஷித்தாயே உனைநான்
வேண்டினேன் அன்பாயே காப்பாயே (மீனா)

சரணங்கள்

நானாவிதமான தீயசெயலாலே
நானென்மதியுங் கெட்டேன்
வேதையும் பட்டேன்
மேனிநொந் திட்டேன்
வந்தித் திட்டேன் (மீனா)

ஊமைக்குமர குருபரன் செந்தமிழ்
உற்றவள்ளைக் காது
என்பா மீது
நீ சா யாது
நின்ற தேது (மீனா)

அன்னோன்பாடலுக்கும் என்பாடலுக்கும்
பேரானவித்யாச மில்லை
அதுவோ தொல்லை
இதுபு தெல்லை
கேளென் சொல்லை (மீனு)

முருகன்திருமால்மருகன் என்றமெட்டு.

இ-அடாணு தா-ரூபகம்

பல்லவி

அம்மா மீனாக்ஷி நானே உன்பிள்ளை
அந்த—ஆனை முகனும் ஆறுமுகனும் இல்லை (அம்)

அநுபல்லவி

சும்மாவாது சொல்கிறே னென்று
தொடர்பற்றிடும்—நிலை விட்டிடு
விபரத்தொடு — விதிசெப்புவன் (அம்)

சரணம்

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா ரென்று
நன்ருய்—ஓதிஅரங்கேற்றினர் சங்கத்தார்முன்னே
உத்தம வள்ளுவர் அன்று
பலர் கத்தும் பாவெல்லாம் உண்மைவிளங்கப்
பகுத்தறி யும்பய னின்று
இங்கே—பாருள்ளீர் வாரீர் படிக்கத்தேர்வீர் குறட்
பாவாகும் நீதிநூ லொன்று

விலகா தீரென்ற விதந்தன்ள லோதீது
விரோதமான இரு . பிள்ளையு மாகாது
நலமான பிள்ளை நா ஒருவேன் கேளீது
நாட்டிலுற்றவர்
கேட்டுவப்பொடு
சாற்றுநற்புகழ்
ஏற்றுமிற்றிடு (அம்மா)

சாஹிச்சித்ரா என்ற இந்துஸ்தான்மெட்டு.

பல்லவி

தமிழே சிறந்ததென உனதுநாமம் விளங்கச்
சாற்றும் அந்தப்பொருளை யாரறிவார்
அம்மா (தமிழே)

அநுபல்லவி

அமிழ்தினிற் சிறந்தது ஆரியத் துயர்ந்தது
அகத்திய னார்சிவ னிடத்தினி லுணர்ந்தது
அடிசீர் மோனையெதுகை தொடைசேர் தளையின்வகை
யாகும் பாவினம் சந்தமா விரிந்தது
வண்ணத் (தமிழே)

சரணங்கள்

திணைபால் காட்டும்விகுதி சிறப்புப் பொதுப்பகுதி
சேர்ந்த விதங்களெல்லாம் தென்மொழிக்கேதகுதி
இணையெனும் வடமொழி இருமொழி யுன்பேர்வழி
இசைக்கும் எழுத்துவ தெல்லாம் வலஞ்சுழி
அதால் (தமிழே)

அகரத்தோ டகரஞ்சேர் வடமொழித் தீர்க்கசந்தி
ஆகுமென் றுரைப்பார்க ளறியார்கள் புத்திநந்தி
மகரவொற் றழிவிதி மார்க்கமென் பதைப்புந்தி
வைத்தவர் மரு வென்றுரே முந்தி
அதால் (தமிழே)

கயற்கண்ணிமொழிபெயர்ப் பதற்கென உரைசெய்வார்
கந்தப்புராண மதின் காப்புச்செய்யு ளறியார்
இயற்படப் புணரியல் என்னுடன் வாதாடுவார்
இசை மராடி என்பதற் கென்புகல்வார்
அதால் (தமிழே)

வடமொழி வழக்கில்லை வழங்குவர் தமிழ்ச்சொல்லை
மலைவேங் கடங்குமரி மற்றிரு கடல்எல்லை
இடமாக வகுத்தவர் இன்றுள்ளார் களுமல்லை
இயம்பும் மீனுக்ஷி என்ற பெயர்வல்லை
அதால் (தமிழே)

## முருகப்பிரான்மீது

### குழிப்பு.

தத்தான தந்த தான
தத்தான தந்த தான
தத்தான தந்த தான தனதான

பெற்றூர்கள் பெண்டு பாலர்
மற்றுன பந்து நேசர்
பெட்பாவ ரென்று கூடி யுறவாடி

பித்தார்வ தன்றி யேம
னற்றலெதிர்ந்தி டாது
பிற்போவ ரென்ற சேதி யறியாதே

கற்றார்கள் சிந்தை யூடு
வைத்தோது நீன்ச ரோரு
கப்போது நம்பி வாழ வினையாத

கற்பாரை நெஞ்ச னேனு
மிப்போது வந்து வாழு
கைக்கான தொண்டு பூணும் வரமீவாய்

பற்றார்பு ரங்க ளீடு
கெட்டேய ழிந்து நீறு
பட்டோட வென்ற கோபர் குருநாதா

பத்தாகி நின்ற மாய
னற்பாய்வ ளர்ந்த மாதர்
பட்சாது லங்கு கோல மணிமார்பா

நற்றார ணிந்த தோளி
லுற்றாரு கின்ற சேவ
னத்தாரை யென்றும் நோவ விடுவோனே

நக்கீரர் சந்த மோது
சொற்சாரு நண்பு கூடு
நற்பால தண்ட பாணி முருகோனே.

கைவரிசை செல்லாதுபோம் என்றமெட்டு.

இ-சுருட்டி தா-ஆதி

பல்லவி

கருணைபுரிவாய் முருகா திருமருவுங்
கண்ண னருமை மருகா (கரு)

அநுபல்லவி

இருமை யறங்களையு மியற்றாத பாவியென்னை
எப்படியுமீடேற்ற இசைவாய்பணிந்தேனுன்னை (கரு)

சரணங்கள்

மதுக்குடிக் கிச்சைப்பட்டு மயங்கினேன் தட்டுக்கெட்டு
மறந்தநானை நான்விட்டு வாழநீ உடன்பட்டு (கரு)

வேசைய ராசையாலே வேதை யடைந்ததாலே
வீணாகுமென்மேலே விருப்பங்கொண்டன்பினாலே (கரு)

ஆறாதார நிலைகள் அறிந்து சமாதிகூட
அருணகிரியைப்போலே அநுதினஞ் சந்தம்பாட (கரு)

மீனாக்ஷியம்பிகைமீது

என்பேரைச்சொல்லி என்றமெட்டு.

இ-செஞ்சுருட்டி. தா-ஏகம்

கண்ணிகள்

மலையத்துவஜ பாண்டியன் மகளே மதுரைவாழ்மீனாக்ஷி
மைந்தனெனக்கிங்கு இந்தவேளைவந்து
தந்தருள் வாய்காக்ஷி தந்தருள் வாய்காக்ஷி

மற்றுளோர்கள் துணை யாரெனக்கு
வாஞ்சைசற் றுமில்லை யோஉனக்கு
பற்றினே னின்பாதம் வாழ்வதற்கு
பாலன்மேல் கோபமா மோஅன்னைக்கு
பார்க்கவேணும் கடைக்கண்ணால்
பார்க்கவேணும் கடைக்கண்ணால்
பார்க்கவேணும் கடைக்கண்ணால் (மலை)

பந்தபாசவினையென்னும்விலங்கிலே பாவிநான்கட்டுப்பட்டு
பாரில்நொந் தேன்கடைக் கண்ணால்பா ராவிடில்
பாழாவேன்தட்டுக்கெட்டு நான் பாழாவேன்தட்டுக்கெட்டு

பார்வதி மாதுமை நாயகியே
பல்லுயிர்க் கும்நல்ல தாயகியே
நேர்வர வேணுமம் மாயரையே
நின்னடித்தொண்டனிந் நாள்வரையே
நீயருள் செய்தென்னைக் காப்பாய்
நீயருள் செய்தென்னைக் காப்பாய்
நீயருள் செய்தென்னைக் காப்பாய் (மலை)

சத்துருசங்காரஞ் செய்யமுருகன்கை தன்னில்வே லானவளே
தக்கன் தவஞ்செய்து பெற்ற பெண்கள் எல்
லோருக்கு மேலானவளே எல்லோருக்குமேலானவளே

சங்கரி நாரணி யந்தரியே
சம்ப்ர மலங்க்ருத சுந்தரியே

இங்குனை நம்பியும் நின்றனனே
எங்கிணைந் ததுயர் கின்றனனே
இத்தரு ணத்தில் வந் தாள்வாய்
இத்தரு ணத்தில் வந் தாள்வாய்
இத்தரு ணத்தில் வந் தாள்வாய் (மலை)

காரகாரஹூி என்ற இந்துஸ்தான்மேட்டு.

பல்லவி

மீனலோசனி தாயே
உன்னை—வேண்டினே னருள் வாயே (மீன)

அநுபல்லவி

நானுண்மை மறவேன் எந் நாளுமுன் பாதம்
நலமுட னிதுததி கொடுமிர சாதம் (மீன)

சரணங்கள்

முத்தொழில்கள்நடத்தும் மூர்த்திகள் துதிக்கும்
முக்கோண யந்திரத்தில் நிற்கச்சம்மதிக்கும் (மீன)

ஐந்துவீட்டுக்குள்ளான ஐம்பத்தோ ரெழுத்து
அவைவிப ரங்களைநான் அறியநீ வழுத்து (மீன)

அய்ஸாதேஹாலியா என்ற இந்துஸ்தான்மேட்டு.

கண்ணிகள்

மீனாக்ஷி பாதமே மேன்மையா வையுந்தருமே
ஈனமதேயுறு வாரது தோஷமை
இல்லாமலேகும்

நல்லோர்: இணக்கமுண்டாகும்
தீமை: எனும்வனம் வேகும்
வங்: திசையுஞ்சஞ்சலங்கள்போகும் (மீனு)

பத்தியை நித்தமு மெத்த, வினைத்துயர்
பரபதவழி காட்டும்
வினைப்: பலமறதில்லை நாட்டும்
மேலாம்: பயனுறவருள்கூட்டும்
ஜென்மப் பாதகங்கள்யாவு மோட்டும் (மீனு)

கும்பன் கம்பன் ஆண்டான் ஓட்டக்
கூத்தன்கவி மேலும்
கவி கூறக்கடல் போலும்
அணி கோலத்தமி ழாலும்
அருள் கொடுக்கு மடிக்கா இடிக்கொருக்காலும் (மீனு)

வாயைமூடி யிருப்பதேனோ என்றமெட்டு.

இ-பியாகு தா-ஆதி.

பல்லவி

காத்திரக்ஷி கடைக்கண் கொண்டு
கன்னி மீனுக்ஷி
வந்து, அன்னையே காக்ஷி தந்து (காத்)

சரணங்கள்

பாத்திரமில்லாத பேதை பாலனானாலும்
பாடுவதுன் பாதமன்றிப் பாரில் மென்மேலும்
பயனின்றிச் சொன்னாலும் என்னைக் (கா)

ஐதொடர்ந்த கொம்புமூன்று யவைகளி லொன்று
அதிதுரித மாமறைந்த தரணைக்கண் டன்று
ஏனோ—அதனைச்சொல் லின்று என்னைக் (கா)

அஞ்சுவிதக் கலையின்பூர்த்தி யாக்ஞை விசுத்தி
ஆமூவ தாதாரமாக அமைந்திடுஞ் சத்தி
சொன்னால், அடைவேனான் சித்தி என்னைக் (கா)

## முருகப்பிரான்மீது

### குழிப்பு.

தனதான தந்த தான
தனதான தந்த தான
தனதான தந்த தான தனதானா.

புவிமீது வந்த சேதி
யெதுவாகு மென்று தேறு
புலனேது மின்றி நாடு பலவோடி

பொருடேடி நின்று மாத
ரொருகூடி யின்ப லீலை
புரிமூட னன்பி லாத படுபாவி

கவிபாடி யின்று நானு
னடிசூடு தொண்டு வேலை
கருதாத வஞ்ச னேனு மகிழோடு

கலையாக மங்கள் கோடி
புகழ்சேவை தந்தி வேளை
கடையேனை நண்பி னாள வருவாயே

அவியாசை கொண்ட தேவர்
பதியாவு மன்று தீய
வனலேவு வண்டர் மாள வயில்வீசி

யமராடி வென்று மீளு
மதியாசு கந்த வாடை
யலர்சூடு குன்றின் மாது மணவாளா

செவியூடு சந்த மோது
கிளிபாடல் கொண்ட சீல
செயவீர கந்த நாத குகவேளே

திருநாத னஞ்ச மேறு
முயர்மாது நண்ப னாடு
சிவபால தண்ட பாணி முருகோனே.

### ஆதாரம் ஏதேனும் என்ற நோட்மெட்டு.

பல்லவி

செந்தூரி லன்போ டெழுந்தார் குகா
சிந்தா குலந்தீர் சிவன் தேசிகா (செந்)

அநுபல்லவி

கந்தா கடம்பா கலங்காது நான்
கண்டோதிடும்பாடல் கொண்டாடல்தான்

நந்தாது வந்தாள் விதந்தேடி னேன்
நண்பா வரந்தா பதஞ்சூடி னேன் (செந்)

சரணங்கள்

கெட்டோர்க ளிஷ்டாசி யைக்கூடியே
கிட்டாம லப்பா உ னைப்பாடியே
தட்டாதெ னைக்காண வைத்தாளிலே
தப்பாதி ருப்பேனி ணைத்தாளிலே (செந்)

பொய்பேசி நைவேலை செய்வாரவா
புல்லாம லுய்வானை சொல்லோதவா
கையாரும் வெல்வேலை யாமாதவா
கல்லாத புல்லோர்முன் னில்லாதவா (செந்)

பொன்னாடு நன்னாடு முன்னாகவே
புன்னாய்கள் தின்னோடு பின்னேகவே
ஒன்னாரை வென்றோட வுன்னாசுகா
உன்னாசை மின்னார்க ளின்நாயகா (செந்)

## மீனாக்ஷியம்பிகைமீது

எதுகுல திலகா என்ற மெட்டு.

இ-மோகனம் தா-ஆதி.

பல்லவி

கனவிலு மறவேன் அம்மா
கனவிலு மறவேன் (கன)

அநுபல்லவி

காதகஞ் செய்பொல்லாப்
பாதக னானாலும் (கன)

சரணங்கள்

மனமது பல வழி யலைத்தாலும்
மாருட்டஞ் செய்து மென்னிலை குலைத்தாலும்
வாரணி நாரணி காரணி
மரகத நிகர்வடி வினையும்
சுரர்தொழு திருவடி யினையும் (கன)

சப்த சமுத்திரம் பொங்கி வந்தாலும்
தாரணி வெடித் தெங்கும் பிளந்தாலும்
சற்றினு மச்சம்நா னுற்றிலேன்
தடைக்கண்ணுந் துயர்ப்புண்ணும்
கெடப்பண்ணுங் கடைக்கண்ணும் (கன)

அண்ட மிடிந்து தலையில் விழுந்தாலும்
ஆதித்த சந்திரர் திக்கு மாறினாலும்
அஞ்சிலேன் கொஞ்சமும் நெஞ்சிலே
ஆக்கத்தொடு நாற்றிக்குகள் போய்த்தத்தியும்
காட்டுற்றொளி நாட்டப்படு மூக்குத்தியும்(கன)

அச்சாமேரி என்ற இந்துஸ்தான்மெட்டு.

பல்லவி

நான் உனக்குப் பிள்ளை யன்றோ
நாடி இங்கு சொல்லுவாய்
சொல்லுவாய் நீயே சொல்லுவாய் (நான்)

சரணங்கள்

தேனெழுகு மாக்ஷி சேருஞ்சோலைக் காக்ஷி
திவ்யவள மதுரை மீனாக்ஷி (நா)

சங்கரி கௌமாரி தற்பரை புராரி
தாக்ஷாயணி புவனாதிகாரி (நா)

தக்காரென்று மாதி சாற்றுங்குறள் நீதி
சாஸ்திரப்பொருள் தநயரின் சேதி (நா)

பொன்னுலகு சென்னிகுள என்ற மெட்டு.

முரட்டுப்பிள்ளை என்றாலும் வெருட்டிய டிப்பதுதாய்
முறைமைய திலைமீனா ளன்னையே மனக்
குறையினில் விடலாமோ என்னையே
முக்கணையுற்றவர் அக்குமணிச்சிவ
சொக்கரிடப்புற முற்றிடுபத்தினி
முதுமறை யணிகாலா ளன்னையே பணி
விதமுண ருவைதீர்நோய் தன்னையே.

உருட்டும்பு ரட்டுஞ்செய்தால் சிரட்டையுங் கையுமாக
ஊரில லையநேருஞ் சங்கடம் எனப்
பாரிலு ரைசெய்வார்நெஞ் சந்திடம்
உத்தமமுற்றவி தத்திலடுப்பது
சற்றுமிலைக்கலி விட்டிடலெப்படி
ஊணுடை யவையோடுந் தங்கிடம் இலை
யேணிலிவி டுகோபம் பொங்கடம்.

தாயை வணங்கவேணும் சேயைக்காப் பாற்றவேணும்
தருமம் நமதிருவர் ஞாயமே இவை
பெருமை பெறவும்நல்லு பாயமே
சாதனைமேவிய பாதகனுனை
யோதினனீயெனை யாளவுமேயருள்
தரவக லுவதநி யாயமே வேறு
சுரரெவர் புரிவர்ச காயமே.

மாயை வினையினாலே காய மெடுத்தெடுத்த
வகைதெரி யவுமில்லை தொல்லையே எண்ணில்
நகைதரு வதுமிகு வல்லையே
மங்களசுந்தரி யங்கயலின்கணி
சங்கரிசெந்தமி ழின்புரியம்பிகை
மதிமுகி மயலெனு மல்லையே கெட
வசனி மறையுரைசெய் சொல்லையே.

வாரிதனு என்ற இந்துஸ்தான் மெட்டு.

பல்லவி

அம்பிகையே மீனம்பிகையே
அம்மாமதுரை மீனம்பிகையே

ஆதரவுன்னையன்றி வேறெனக்கேது
அடிமையைத் தண்டித்தாலுங் கடினமாகாது
ஆனைமுகப்பிள்ளை ஆறுமுகப்பிள்ளை
அக்ரமங்கள் செய்யாது

அச்சம்பயமொடு தத்தந்தொழிலில்நடக்
கின்றாரோ புவிமீது
அம்மா நீயே ஓது அம்மா நீயே ஓது (அம்)

ஞானிகுகனுமென்று கேள்வியும்பட்டேன்
நன்குபோதிப்பனென்று காத்திருந்திட்டேன்
நானிலமோடியன் றென்பதிதேடி
நாடோறும்போய்க் கும்பிட்டேன்
நாலுவிதத்திலு மடையனெனப்படும்
நானவனை நம்பிக் கெட்டேன்
இந் - நாளுன்பாதந் தொட்டேன்
நாளுன்பாதந் தொட்டேன் (அம்)

அடைக்கல மானஎன்னை யகற்றலொண்ணாது
அன்பர்களுக்குச்செய்யுந் துன்பந்தகாது
ஆதலினாலிது வேளையிலே அழ
கா நின் கருணை தவறாது
அந்தரி சுந்தரி நந்தரி சோதரி
அருள்செய்வாய் நீ தப்பாது
அட்டியேனிப்போது அட்டியேனிப்போது (அம்)

## முருகப்பிரான்மீது

### குழிப்பு.

தய்ய தந்த தான
தய்ய தந்த தான
தய்ய தந்த தான தனதானா

வையம் வந்து வாழ
லெய்து துன்ப மீறி
மையல் கொண்டு மாதர் பிறகோடி

மௌவல் கொண்டை சூடி
நையு மிந்த மூடன்
வையு மன்பர் நீதி யதுகேளேன்

பொய்யி ணங்கி வாழு
மல்ல லிங்கி லாது
புல்லர் நண்பு போக விதுவேனோ

புள்ளி துன்று தோகை
வள்ளி லங்கு வேன்மெய்
புல்லு மங்கை மார்க ளோடுவாராய்

கையி லன்று லோக
முய்ய மண்டை யோடு
கவ்வ வந்த நாதர் தொழுவோனே

கல்வி கண்ட னேக
சொல்வி ளம்பு வார்கள்
கள்ள மின்றி வாழ வருள்வோனே

வெய்ய குன்று வேடர்
தைய லன்பு மேவ
மெல்ல முன்பு சேரு முதியோனே.

மெய்மை யென்றும் நாடு
செய்ய தொண்டா காதில்
விள்ளு தண்ட பாணி முருகோனே.

இன்னுந் தாமதமேனடா என்ற மெட்டு.

இ-சங்கராபரணம் தா - ரூபகம்.

பல்லவி

கருப்புகாமல் கண்பாரையா ஏழைநான்கொண்ட
கவலை முற்றிலுந் தீரையா (கரு)

அநுபல்லவி

திருப்பரங்கிரி வேலா சிவனாருளும் பாலா(கரு)

சரணங்கள்

எத்தனையோ பிறவி எடுத்தெடுத்து வந்திட்டேன்
எள்ளளவிலும்புத்தி யில்லாமல் மதிகெட்டேன்
சத்தமுதலைம்புலம் சாரமென் றிச்சைப்பட்டேன்
சரவண பவனே உன் தாளிணையைக் கும்பிட்டேன்(கரு)

அருணகிரி புகழில் அநுதினம் பழகுற்றேன்
ஆனாலும் ஞானமின்றி ஐயையோ மதியற்றேன்
ஒருமை நிலையில்நில்லா உள்ளத்தா லிடர்பெற்றேன்
உன்பாதந் துணையாமென் றுறுதியாயெண்ணமுற்றேன்(க)

ஊமைக் கருள்சுரந்த உன்மகிமையைக்கேட்டு
ஒருபிழையின்றிப்பாட வுரைத்திடும் நிலைவேட்டு
நேமப்படியுன்கோயில் நித்தங்கும்பிடுபோட்டு
நிற்கின்றே னடிமை நீயுன் னுடனேகூட்டு(கரு)

## மீனாக்ஷியம்பிகைமீது.

எப்படியிருந்தால் நமக்கென்ன என்ற மெட்டு.

இ-தர்பார் தா-ஆதி

பல்லவி

மேற்குலத்துமாதாவாயோ சொல்லடி மீனாக்ஷி(மே)
வித்தாரம் நீயுரைத்தாலும் தக்காது நல்லதல்லடி(மே)

அநுபல்லவி

காற்பதுமங் தேடிவந்து காசினியோர்பூஜித்தாலும்
கண்டுபோற்றிஇந்திராதி யண்டர்புகழ்வாசித்தாலும்(மே)

சரணங்கள்

ஆட்டிடைய னண்ணனுதன்
கோட்டிகொண் டிட்டவலையன்
ஆசைமகனுங்குறவ னல்லவோ—உன்றன்
அந்தரங்க மர்மமான நிந்தைபழி நானறிவே
னத்தனையு மிங்கெடுத்துச் சொல்லவோ
கேட்டிடி லூரார்சிரிக்க கேவலங்கள்விஸ்தரிக்க
நாட்டிடு முபசரிக்க நான்பாடியுன் னைஸ்மரிக்க(மே)

தக்கனுக்கும் சந்த்ர சேகரக் கவிராஜ
பண்டிதனுக்கு மகளாகிப்
பிராமணத்தியோ
புவி— தாங்குமிமவானுந் தமிழோங்கு கூடல்
பாண்டியனுந்தாம் வளர்த்ததாலே
க்ஷத்திரியத்தியோ

சொக்கனைச்சே ரும்பறைச்சி
தோலுடுத்தூஞ் சகிலிச்சி
அக்குமணி பூணெட்டச்சி
ஆதியெனும் அம்பட்டச்சி (மே)

ஊமையன் பிள்ளைத்தமிழ் உன்மீது பாடி மேன்மையா
யுயர்த்திப் புகழ்ந்தது முப சாரமே—நேரில்
உற்றிடுங்கர்மத்தால்ஜாதி ஜென்மத்தால்ஜாதியில்லையென்
ருேதினுமுணர்ந்துபாரிந் நேரமே
தாமதமெ தற்குச்சொல்லு
சாஸ்திரங்கொண் டென்னைவெல்லு
பாமரமாத் தில்லுமல்லு
பண்ணிப்பேச வேண்டாம்கில்லு (மே)

ஞாயந்தானே நீர்சொல்லும் நந்தனர் கீர்த்தனைமெட்டு.

பல்லவி

வந்து தந்தருள் காக்ஷி

அநுபல்லவி

நல்ல—மந்தகாசமுக மதுரைமீனுக்ஷி (வந்து)

சரணங்கள்

பந்து ஜனங்களோடு கூடி
வாழ்தல் —பயனென் றவரோடுற வாடி
நாளும் —நொந்தலுத் தேனுடலம் வாடி
கண்ணுல் —நோக்கி என்னைநீ தேடி (வந்து)

ஆண்டியை நம்பினவர் ஆண்டி
யென =அமையு மிலக்கியமா னேண்டி
சிங்கம் =தூண்டி நடைகொண்டுதென் பாண்டி
தேச =துரைமகளே என்னைநீ வேண்டி (வந்து)

இங்கிதச் செந்தமிழை விழைந்தேன்
நாளும் =இலக்கணங்கற்றுநெஞ்சுகுழைந்தேன்
காணும் =சங்கநூல்களிலெல்லாம்நுழைந்தேன்
அதால் =சந்தேகத் தருவெனைத் தழைந்தேன் (வந்து)

பலகவி இசையும்வி நோதம்
நானே =பாடித் துதிக்கஞான போதம்
நீயே =நல்க உனக்கென்னபிர மாதம்
ஏழை =நம்பி னேன்கமல பாதம் (வந்து)

பகாரியாலா என்ற இந்துஸ்தான்மெட்டு.

சகாயமேசெய் போற்றி தாயேமீனாக்ஷி
சத்வலக்ஷணப் பண்புற்ற தத்துவாக்ஷியே
சர்வலோகமெங்கும் ப்ரகாசிக்கும்ஜோதியே (போ)

பற்றுமிக்க உற்றகுற்ற முற்றும் நீதீர்க்க
பஞ்சகோசந் தாண்டிவந்துன் காக்ஷிநான்பார்க்க (போ)

நேராய் ஏறக் காண்பியம்மா ஆறுதாரமே
நீயருள் செய்யாயேல் ஏது வேறுதாரமே (போ)

வாடா சமயமீதடா மதனு என்றமெட்டு.

இ-கமாசு தாளம்-ரூபகம்.

பல்லவி

எதுக்கிந்த வர்மமென் மீதிலம்மா
இன்னதென்று சொல்லம்மா (ஏ)

சரணங்கள்

ஆதர வானவிலை மேதினி மீதினிலே
அதிவிரை வினிலெனை
ஆளுவாயிவ் வேளைநேரில் (ஏ)

இந்திரை வந்துதொழு மந்திர சுந்தரியே
எழில்வள மதுரையில்
ஈசனார் மகிழ் ஆசை நாயகி (ஏ)

தத்துவ சுத்தமுற நத்துவர் சித்திபெறத்
தரவரு விதவகை
ஸ்தானவாசினி மீனலோசனி (ஏ)

முருகப்பிரான்மீது.

நானொரு பெண்பிறந்து என்றமெட்டு.

இ-நீலாம்புரி

பல்லவி

திருப்பரங் குன்றில்வளர் தேவா சண்முகநாதா
திருவடி தந்தெனை நீ அருள்புரிவாய் (தி)

அநுபல்லவி

கருப்பிற வியில்வாடி கண்கலங்கு மேழையைக்
காப்ப துனது பாரம் கருணைசெம்வாய் (தி)

சரணங்கள்

மூடரோ டுறவாடி மூத்தோரோடு போராடி
மோசம்நான் போகலாமோ முறையிதுவோ (தி)

கேடடை யாதுவாழக் கிட்டியுன் னிடம்வந்து
கெஞ்சுகின்றேன் நான்வேறு கெதியிலேயே (தி)

பண்டுநாளில்நான்செய்த பாழ்வினைத் துன்பத்தினால்
பதறி வருந்துகின்றேன் பதந்தருவாய் (தி)

தொண்டர்களோடுகூடித் தோத்திரஞ்செய் துன்னருள்
தோயும் வரந்தருவா யிதுவேவேளையே (தி)

அய்ஸாதேகோ என்ற இந்துஸ்தான்மெட்டு.

தென் றிருப்பரங்கிரிச் சிவகுருபாதத்தைத்துதி
சித்தத்திலெந் நாளுமதி
சேரஅருளும் நம்பதி (தென்)

சென்று சென்று பக்தகோடி
சேவித்துப் புகழைப்பாடி
திவ்ய மங்களங் கொண்டாடி
தேர்ந்துமே யின்பத்தைநாடி
சிக்கென விழிகள்மூடி சிற்பரசமாதிகூடி

சேருமோர் லயம்
நீயுந் தேடுகிச்ச யம்
தேகம்நிலையாதவாழ்வு ஆகையினாலோதினேன்நான் (தே)

## மீனாக்ஷியம்பிகைமீது.

சற்றே கடைக்கண்பாராய் என்றமெட்டு.

இ-பரசு தா-ரூபகம்.

பல்லவி

நாடு மெனையாளுவாய் பேணி

அநுபல்லவி

மதுரை: ராஜ்ஜியஞ் செழிக்கச்செங்
கோலோச்சிடு மீனாக்ஷிராணி (நாடு)

சரணங்கள்

தோடுடைய என்றுமுன்னம் பாடவலி ஓர்பிள்ளைக்கு
சுந்தரி முலைப்பாலீந்தாய் தந்தாயோ ஏதுமெனக்கு
சொந்தமோ அன்னான்
அயல் = வந்தவனோ நான்
மிகு = துஷ்டப்பிள்ளை யானலென்ன (நாடு)

கண்ணொன்றில்வெண்ணெய்யுமற்றக்கண்ணொன்றில்சுண்ணம்பூச
எண்ணுவாரோஉலகத்தில் எல்லோரும் நிந்தித்துப்பேச
இச்செய்கைப் பேதம்
உரைக்கப் பக்ஷ பாதம்
இங்கு=என்செய்தாய் நீதிக்குச்சேதம் (நாடு)

கூலிநீ கொடுத்தபின்னே வேலையவன் செய்தானன்றோ
எனும்வேலை செய்தேன்கூலி யீயாம லிருத்தல்நன்றோ
இதுவுந் தர்மமோ
என்—விதியின் கர்மமோ
சிறு—ஏழைமீதிலேன் வர்மமோ (நாடு)

இ-சுருட்டி. தா-சாப்பு

பல்லவி

மதுரைநகர்க்கு வாருங்கள் மீனாக்ஷிசேவை
மகிமையைநேரில் பாருங்கள் (ம)

சரணங்கள்

விதுவணிச் சடையவன் விளையாடல் எட்டெட்டிட்ட
விரும்பியே மண்சுமந்து பிரம்பினால் அடிபட்ட (ம)

அபிஷேகம் அலங்காரம் அருச்சனை தூபதீபம்
அமுதுநை வேத்யவகை அளவிலாப் பிரதாபம் (ம)

கொஞ்சமோ அணிபணி கூறமிகுப்ரயாசம்
கொண்டமூக்குத்திஒன்றே கோடிசூரியப்பிரகாசம் (ம)

பார்த்தகண் பாதமன்றிப் வேற்றிடத்தில்மீளாது
பக்திச்சொல்லன்றிச்செவி மற்றைச்சொல்லைகேளாது (ம)

எங்குபோனாலுமுன் கூட என்றமெட்டு.

கண்ணிகள்

மதுரைநகருன் அர சாக்ஷி
குற்ற—வாளியைத்தண்டஞ்செய்மீனாக்ஷி

சதிவஞ்சனைசெய்யும் சங்கமாண்டி ஜாதி
சரவணப் பண்டாரந் தான்பிரதிவாதி (ம)

இதமஹிதம் எண்ணாத வம்பன்
அவன்—எத்துவித்தைக்கரட கொம்பன்
சதமென்று நானெண்ணச் சார்ந்து மிகுநேசம்
தான்செய்திடையில்செய் தான்கம்பிக்கைமோசம் (ம)

பாரிலெட்டுத்திக்கும் ஓடி
நான்—பாடுபட்டுப்பொருள் தேடி
ஆருமறியாமல் அமைத்தே னதுபொய்யோ
அந்தரங்கக்காரன் அடித்தான்கொள்ளையையோ (ம)

ஊரிலவன்படுக் காளி
இணை—உண்டோ பழங்குற்ற வாளி
சீர்நிலை எண்ணாமல் சித்த மயலானான்
சிறியகுறப்பெண்ணைச் சிறைகடத்திப்போனான் (ம)

கோழி யவன்பிடித்த சேதி
இன்னும்—கூறவேணுமோ சாக்ஷி ஓதி
ஆழிக்கரையூரை அடுத்தவேசிக்கள்ளன்
அவனுக்குக்கையாளோ அகத்தியனாங்குள்ளன் (ம)

பாழிலென்னைக்கெடுக்கப்பார்த்தான்
பொல்லாப்-பாலைவனத்தின்வழி சேர்த்தான்
ஊழிஊழிதோறும் உன்றனை நானென்றான்
உபகாரம்செய்வான்போல் அபகரித்துநின்றான் (ம)

அள்ளிஅள்ளிநீர்குடிக்கும் என்ற மெட்டு.

இ-காம்போதி தா-ஆதி.

கண்ணிகள்

வேந்தர் குலத்துதித்த மீனாக்ஷி யன்னையே
வேண்டினேன் காப்பா யென்னையே நானுன்னையே
வேண்டினேன் காப்பா யென்னையே
வித்தைபடித்த பித்த மலைக்க
நத்தியடுத்த பத்திநிலைக்க (வேந்)

சாந்த ரூபியுனது தாளடி போற்றினேன்
தமிழ்ச்சந்தப் பாடல் சாற்றினேன் தொண்டாற்றினேன்
தமிழ்ச்சந்தப் பாடல் சாற்றினேன்
தத்துவமுற்றிய உத்தமநற்பொருள்
பெற்றுமகிழ்ச்சியி லுற்றிடவைத்தருள் (வேந்)

அபிராமி காதணியால் மதிகாட்டும் வஞ்சகி
அடியார்க் கருள்செய் ரஞ்சகி அரன்சகி
அடியார்க் கருள்செய் ரஞ்சகி
ஆதரவானது நீயலதேதிலை
ஆதலினலிது நாளருள்வாய்கலை (வேந்)

சிபிராஜன் வாக்குறுதி செய்தது சித்தியே
சேரவைத் திட்ட சத்தியே தேகவ்ருத்தியே
சேரவைத் திட்ட சத்தியே
சித்தஜனுக்கும லர்க்கணையிக்குவில்
முப்புவனச்செய முற்றவளித்தருள் (வேந்)

ஆண்டிக்கு ராஜயோக மாக்கிய நாயகி
அகில புவன தாயகி ஜயசாயகி
அகில புவன தாயகி
அட்டதிசைகளி லுற்றவலியவர்
முற்றுமடிதொழ வெற்றிபுரியுயர் (வேங்)

வேண்டியுனைத்துதித்தேன் விஞ்சைத்துரந்தரி
விதுவின் வதன சுந்தரி நிரந்தரி
விதுவின் வதன சுந்தரி
வேறெனைநீவிட லானதுபாதகம்
வேதனையேகவு மேயருளீகுவை (வேங்)

## இஸ்ரமதேரஹைறு என்ற இந்துஸ்தான்மெட்டு.

பல்லவி

கடைக்கண் பாரம்மா அம்மா
கடைக்கண் பாரம்மா (க)

அநுபல்லவி

கதியுனை யல்லால் கருதில் யாரம்மா (க)

சரணங்கள்

அடைக்கல முனக்கல்லவோ என்றன்
அவஸ்தையையின்னுஞ் சொல்லவோ
நடைக்குட் செல்லவோ —தீய— நடைக்குட் செல்லவோ
எமன் — நாடிலுன் பிள்ளை வாயை மெல்லவோ (க)

உத்தமநெறி யுற்றிலேன் நானும்
ஓதியுன்புகழ் கற்றிலேன்
பத்மம் பற்றிலேன் —பாத— பத்மம் பற்றிலேன்
பாரிலோர்துணை யேது மற்றிலேன் (க)

விருதுகொள் புஷ்ப பாணியே வேத
வித்வ சாகரத் தோணியே
கருது பேணியே —என்னைக்— கருது பேணியே
நல்ல —கயற்கண்ணி யென்னு மதுரை ராணியே (உ)

அன்னைதந்தை உன்னையன்றி என்ற மெட்டு.

பல்லவி

நம்புவீர் மீனம்பிகையை முப்போதும்

அநுபல்லவி

நாடிவந்து காவல்செய்வா ளெப்போதும்

சரணங்கள்

அம்புவியில் வேறுதுணை யாரொருவ ரில்லையே
ஆதலினாலேமகிழ்ந்து கேளுங்களென் சொல்லையே
அல்லால்வரும் தொல்லையே நல்லமதுரை எல்லையே
ஆவலினோடிதை வேளையிலேகிரீர் (ந)

வாசலடை யாதிருப்பாள் யாசகம் கொடுக்கவே
வந்துபோற்றுகின்றஅன்பர் துன்பங்கள் கெடுக்கவே
மாயைத் தடுக்கவே வான்பதி விடுக்கவே
மாமதுராபுரி ஊரிலே வாழுவாள் (ச)

அறுபத்து நாலுவிளை யாடல்செய்த க்ஷேத்திரம்
அன்புடைய பேரேஅந்த ஊரில்வாழப் பாத்திரம்
அல்லாருக் கெம்மாத்திரம் அயன்வகுத்த சூத்திரம்
ஆதலா லேதொரு தாமதம் ஏகிநீர் (ந)

## முருகப்பிரான்மீது

சாஹிச்சித்ரா என்ற இந்துஸ்தான்மெட்டு.

பல்லவி

திருப்பரங் கிரிவேலன் திருவடி நீர்பணிவீர்
ஜெனன வினையகலுஞ் சுகம்பெறுவீர் (திரு)

அநுபல்லவி

நெருப்புவண்ணனுக்குமே ஒருப்படும்மனநிலை
நிறுத்தும் நெறியுரைத்த குருப்புநிதன்
விருப்பமுற்றதொண்டர்க்குக் கருப்பிறவிவராத
விதத்திலருள்செயும்ரஞ் சிதத்தன் இதன்
சொன்னேன் (திருப்)

சரணங்கள்

கும்பன் நக்கீரனுஞ்சிற் றம்பல நாடியுஞ்சொற்
கொண்டடி போற்றியது கண்டருள்வோன்
உம்ப ரசுரராலே தம்பதி போக்கும்நாளில்
ஒன்ற அவர்க்குவாழ்வு நின்றருள்வோன்
சொன்னேன் (திருப்

மலைதொறும் நடமிடும் கிலையுடைய சம்ப்ரமன்
வலிய அயிலாயுதன் கலைபுகல்வோன்
அலைகட லருகிலும் பலபல விதவிதத்
தலமவை யிலும்ஒளி இலகலுளான்
சொன்னேன் (திருப்)

நீலமயிலேறும் என்றமெட்டு.

இ-தோடி தா-ரூபகம்.

பல்லவி

ஏனோ துன்பம் ஏழைமட நெஞ்சமே
ஏங்குவ தாலாம் இல்லை பரிதாபம் (ஏ)

அநுபல்லவி

வானோர்பணி வள்ளி மணாளனை
வந்தித்துச் சிந்தித்து வாழ்த்தித் துதிக்காமல் (ஏ)

சரணங்கள்

வாதம் பித்தங்கோழை மாறி வருந்தேகம்
மாநிலத் தில்நிலை நிற்பது சந்தேகம்
சீதம் உஷ்ணமிகும் வேளை யாகுஞ்சோகம்
தேறாமல் நாடாதே தீராது மாமோகம் (ஏ)

ஊமையை யும்பேச வைத்தானன் றோபண்டு
உன்கவலையைமாற் றானோ வருள்கொண்டு
தீமை வழியை யகன்றால் நலமுண்டு
சேவித்து நில்லவன் சேவடியைக்கண்டு (ஏ)

வெற்பொடு பேயஞ்ச வேலை எடுப்பவன்
விண்ணவர் சோகம் விரைவில் கெடுப்பவன்
நற்புகழ் கேட்டாலங் நாளிலடுப்பவன்
நத்திலுனக்கும் நலத்தைக் கொடுப்பவன் (ஏ)

பத்தனொருவனைப் பைங்கிளி யாக்கினன்
பாடலாசைகொண்டே தோளிலுந் தூக்கினன்
முத்தியளித்திடு முந்நான்கு நோக்கினன்
மோகம்போகுந்தொழு மூடரை நீக்கினன் (ஏ)

## மீனாக்ஷியம்பிகைமீது.

அந்தரங்கமுந்தெரிந்த என்ற மெட்டு

இ-தன்யாசி தா-ரூபகம்.

பல்லவி

என்னை— பெற்றவள்கை விட்டுப்போனாள்
மற்றவள் நீயே மீனாக்ஷி
பேணி வளர்த்திட்டாலு மென்ன (பெ)

அநுபல்லவி

சற்றுமவட்குதவாத தறுதலைப் பயலானேன்
சமஸ்காரம் செய்வதற்கும் கொடுத்துவைக்காதுபோனேன்()

சரணம்

என்னை— கருத்தரித்திட்டபோது வருத்தமுற்றவிதத்தை
கணக்கிடலாமோ யாராலும்

தினம்-காலைமாலைமத்தியானவேளையும் பாலூட்டியென்னை
காப்பாற்றி நின்றாளே அன்பாலும்
பொருத்தமாக அதனைப் புகல எனக்குவித்தை
போதுமோதெரிகுவாயிப்போது நீ யந்தவிதத்தை(பெ)

ஐப்தகலந்தர என்ற இந்துஸ்தான்மெட்டு.

உன் துணை யின்றிவேறு ஒரு துணை எனக்கில்லை
உத்தமியே மீன லோசனியே
உறுதி மொழிகிறேனுன் கருதிநீ வரவேணும்
உனக்குப்பழிவரும் இல்லாலினியே
உற்றசிறுபாலர் நாடகக்கம் பேனியே
லோகப்ரசித்தமாகத்திக்கு திங்கள் வதனியே
ஓங்கும்வீரவிற் பன்னியே
உன்பதபங்கயமே தஞ்சம் ரஞ்சனியே இங்கு (உன்)

தேஜஸிவுயர்ந்த பாத்திரம் என்றமெட்டு.

இ-தோடி தா-ஆதி

பல்லவி

என்னைக்கைவிடாதே மீனாக்ஷி உன்
இணையடிமலரின்றே துணையெனநம்பிநின்றேன்(எ)

அநுபல்லவி

முன்னைநாள் வினையினாலே மொட்டையாகப்போய்விட்டாலும்
மோசமான வர்களோடு நாசமாக நேர்ந்திட்டாலும்(எ)

சரணம்

காசிமுதல் ராமேசு வரங்களி லோடி
கங்கை யமுனைகோதா வரித்தீர்த்த மாடி
பூஜை யுனக்குச்செய்து போற்றிக்கொண் டாடி
புரிந்த பணிவிடைகள் தெரிந்ததில்லையோ நாடி (எ)

தாமதமினி யேனடாதடி என்றமெட்டு.

பல்லவி

எனக் = கருள்புரியிது தருண மன்னையே
அடியிணைப்போற்றி நம்பினேன் (அ)

அநுபல்லவி

திருமருவிய மதுரைமாநகர்
சிற்பர தத்துவ போதவேத சாசனி
அற்புத விற்பனி யானமீன லோசனி (அ)

சரணம்

பாரிலெண்ணைக்கை விடுதலும் நன்றோ
பாதசேவைசெய் யூழிய னன்றோ
பூரணஞானம் போதிப்ப தென்றோ
புகலுனையல தொருவருமில்லை
மிகுபழிவரு வதும்ஒருதலை (அ)

மற்றுப்பற்றேன என்ற மெட்டு.

சுந்தரேசுரர் பங்கிலே யுறை
சுந்தரி யேமீ னம்பிகா!
எந்த நாளினில் என்னை யாள்வையோ
ஏழைநான் உயிர் வாழ்வனோ

கந்தனே கண்ணீ ராறுகொண்ட மெய்
காட்டினான் ஒரு மையென
இந்த நாளினி லேதுணை யெனக்
கேதுந் தோணிட வில்லையே.

அண்ண னுக்குமே லெழுகையுந் தன
தப்ப னுக்குமே லிருகையும்
எண்ண வேஉடை யா னுனக்கு
மினிய மைந்தனு மாவனே
பண்ணு மூழிய னுகுவேன் சிறு
பாலனு னய லாவனே
கண்ணில் லாதவ ளானையோ உரை
காரணங் கயற் கண்ணியே.

ஊமையன் சொல்லக் காட்டினுஞ் சும்மா
உளறு வாயன்சொல் மேலென
பூமியி னுரை யாடு மோர்மொழி
புதுமையோ முது பழமையே
வாமி நீயது கேட்ட தில்லையோ
மைந்தன்நான் குமர குருபர
நாமன் சொல்லினும் தாழ்மைச் சொல்லனே
நல்கி லாதத நீதியே.

மாட்டி லேறுவார் பாம்பு பூணுவார்
வந்து வந்துநா ளுந்தலை

ஒட்டிலே இரந் துண்ணும் பித்த
ருனக்கு நாயக ரானதால்
பாட்டிலே ஞான மில்லை யாயினும்
பாரதி சொல்வாள் கேட்டுக்கொள்
கோட்ட மின்றிநான் கேட்ட தைக்கொடு
குற்ற மில்லைமீ னுக்ஷியே.

கற்ற நாவலர் சொற்கு வந்து
கருணை நீபுரி வாயென
முற்றும் நம்பி மதுரை மாநகர்
முன்னி வந்தது கண்டனை
பெற்ற தாயும் பிரிந்து போயினள்
பேணு வாரினி யாரெனை
உற்ற கோபமென் மீது னக்கென
ஓது வாயிது வேளையே.

நோநட்லசாகிந்துரு என்ற மெட்டு.
இ-பியாக் தா-ஆதி.
பல்லவி
மாதாமீ னுக்ஷி யுண்டு — நீ
வாடாதே துன்பங்கொண்டு (மாதா)
அநுபல்லவி
ஆதாரமாகுவளுக் காதிமுதல்நாம் தொண்டு (மாதா)
சரணங்கள்
பாதகங்கள் யாவும் நீக்கி
பக்தியை மென்மேலுண் டாக்கி

பேதமென் ணமல்கண் நோக்கி
பேணி ரக்ஷிப்பாள்கை தூக்கி (மாதா)

வித்தை செல்வத்தைதக் கொடுத்து
மேற்பத வியில் விடுத்து
மத்திநேர் துன்பங் கெடுத்து
வந்தாள் வாளரு கடுத்து (மாதா)

புக்க வருகின்ற சேதம்
போக்கி எந்நாளும் அபேதம்
தக்க ஒதிஞான போதம்
தந்தாள்வாள் வரப்ர சாதம் (மாதா)

இன்னும் பராமுகமா என்ற மெட்டு.

இ-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி

வந்தாளவேண்டுகின்றேன் அநுதினமும்
வாழ்த்திநான் போற்றிநின்றேன் (மனமகிழ்வாய்)

அநுபல்லவி

கொந்தாரும் நந்தவனக் கூடலில்தினங்காக்ஷி
கொடுத்தடியரைக்காக்க அடுத்தவளேமீனாக்ஷி (வந்)

சரணங்கள்

சிந்தாகுலத்தைத் தீரம்மா உனையலாமல்
திக்குவேறினி யாரம்மா (விரைவில்வந்து)
மந்தாநிலஞ் செனிக்கும் மலயமுனிவனுக்கும்
மதிப்படங்காத பாட்டு
துதிக்கநின்னாலும் வேட்டு (வந்)

129472

பிள்ளைத்தமிழ் ப்ரபந்தம் பெரிதென்பதுன்
பேருக்குரிய சொந்தம் (அல்லால்வேறுண்டோ)
வள்ளைத்தண்டுபோல்செவி மாதா உனதுக்ருபை
வரத்துக்குப் பாடு பட்டு
சிரத்தைப்பட்டேது மட்டு (வந்)

வெள்ளைக்கலை மகளுக்கும் பூமகளுக்கும்
விண்ணோர் தேவிமார்களுக்கும் (பணிபுரியும்)
விள்ளுமுனதேவலை வேதம்நான்கோமொழியும்
வேறுன் பெருமைகளைக்
கூறயா ரால்முடியும் (வந்)

இ-மோகனம் தாளம்-சாப்பு.

பல்லவி

வாவா இதுவே தருணம் விரைவினில்

அநுபல்லவி

தாமதம்புரி யாமலேழைமுன்
சாரநேரி டாததேது சரியிலை(வாவா)

சரணங்கள்

பாச வினைமிகு மோச நிலையொடு
தோஷ மதுசெய்தல் பார்த்திலையோ
ஈசனார்மகிழ் நேசியேமனம்
இளகிடாத விதமு மேது அருள்செய(வாவா)

மாக்ஷிமதுரைமீ னாக்ஷியுன தர
சாக்ஷிமனுமுறை நெறியலவா

தாழ்ச்சியின்றியே காக்ஷிதந்திடத்
தரணிமீது கருணையொடு விழியெதிர் (வாவா)

வேதை தருகிற சூது புலைகொலை
வாது களவுகள் மிகவுடையேன்
தாதையனையுமி லாத எளியவன்
தருமமேவு முருவமான மதிமுகி (வாவா)

என்முகம் பார்த்தருளையா என்றமெட்டு.

இ-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி.

பல்லவி

தத்துவ வித்வ மீனாக்ஷி நீ
தந்தருளெனக்கிந்தத் தருணமுன்காக்ஷி (தத்)

சரணங்கள்

அத்துவிதப் பொரு ளானசங் கரியே
ஐயுங்கிலியுஞ் சவ்வும் அறையுஞ்சுந் தரியே (தத்)

பிரவர்த்திநிவர்த்திசெய் பெரியதந் திரியே
பேசாத மௌனஓங் காரமந் திரியே (தத்)

பஞ்சகோசத்தால்தடை பண்ணும்வஞ் சகியே
பணியு மடியர்களுக் கினியரஞ் சகியே (தத்)

திரிகரணமொருமை சேர்க்குமெய்ப்பொருளே
சிவ்வெழுத்தோடுகூட்டும் வவ்வெழுத்தருளே (தத்)

## முருகப்பிரான்மீது

### சிறுபிராயத்தில் என்றமெட்டு.

இ-ஆனந்தபைரவி தா-ரூபகம்.

பல்லவி

தெய்வகுஞ் சரிநாதன் திருவடி மறவாவல்
தினம் நினை வாய் மனமே (தெ)

அநுபல்லவி

செய்வதொன் றறியாமல் திகைத்து வருத்தங்கொண்டு
தேம்புவ தாலென்ன சேரும் பலனுண்டு (தெ)

சரணம்

பிறவி யெடுத்தபோதே பெருகும் பொல்லாவிசாரம்
பித்த மதிகரித்தால் பெண்கள்மேல் விபசாரம்
உறவினர் பொருள்கண்டா லுதவுவா ருபசாரம்
ஒருகாசு மில்லையென்றால் புரிவாரே அபசாரம்

ஊனுடைக்கவதி படலால் பலபேர் புகழ்
ஓதி நிற்கவிதி வருமே அதனால் உயர்
நாணும் விட்டுமதி கெடுமே இழிவா லது
நாளடுத்தகதி . நினைவா யழுதே வழி

நாடிமாநிதி தேடியேவள
நாடுகோடிகி லாமலாசையி
லோடியோடியு வேனிவாடிட
ஊசலாடிட நேருமாணிடர்

உளவறிந்து புகலுகின்ற
நிலைமையெந்த விதமிகுந்த
களவுகொண்டு திரியும்வம்பர்
பலர்களுண்டு புவியிலிந்த

ஊனமெமலிய தேகமானது
பாழிலேல்கெட நாடலேனது
ஞானமேபெற ஓதினேனிது
நாளிலேநலம் வேறுதானது (தெய்வ)

வல்லானே என்ற மெட்டு.

கண்ணிகள்

செந்தூரா
சேயுனது கண்பாராய்
தேறுநல் வரந்தாராய்
சேவடி மாமல ரேதொழு தேனுயர் (செந்)

இந்தேறு
வேணியரன் முன்கூறு
வேதமொழி இன்பாறு
ஏதது நீயுரை ஞானம தாம்வகை (செந்)

வைவேலா
மாலினியு மைபாலா
மாதவர்நி னைசீலா
வானவர் சேனையி னாதிப னாகிய (செந்)

## மீனாக்ஷியம்பிகைமீது.

சாமிவாவா நாமிருவரும் என்றமெட்டு.

இ-சங்கராபரணம் தா-ரூபகம்

கண்ணிகள்

மீனலோசனி பாதமேகெதி
மேவுமவளேமதுரை யாளதிபதி (மீன)
மித்தை யாமுல
கத்திலேசொல
வித்தையோபல
வேதம் நாலு மோதினாலும் (மீன)

ஞானசதானம் மோனமாமென
நாடியுரை யாடிமறை நாலுமோதின
நந்த ணிந்தவன்
முந்துமந்தணன்
உம்பர்இந்திரன்
நாடுசொக்க நாதர் பக்கம் (மீன)

சாஸ்திரவாதம் எல்லாம் சூஸ்திரபேதம்
தாரணிவாழ் வேகனவு காணும்விநோதம்
தர்க்கமேதுக்கு
மிக்க தீதுக்கு
தத்து ஏதுக்குச்
சாக்ஷி சொல்லக் காக்ஷி நல்கும் (மீன)

பூஸ்திதியினால் ஆஸ்பதமேது
போஜன உறக்கவகை லாபமாகாது
புத்தி யெட்டிடும்
பத்தியொட்டிடும்
முத்தி கிட்டிடும்
போற்றுந்துதி சாற்றுந்ததி (மீன)

சஹானாபுசே என்ற பாரீசுமெட்டு.

பல்லவி

வர்மமேதம்மா என்மீது
வர்மமேதம்மா (வர்ம)

அநுபல்லவி

மாமதுரை மீனும்பிகா இந்த (வர்ம)

சரணங்கள்

தரும சொரூபிநீ யன்றோ
தயவுசெய் யாதது நன்றோ
கருணைதா னின்றோ
(உனக்கு) கருணைதா னின்றோ
என்னை - காக்கவேகண்ணால்நோக்குவதென்றோ (வர்ம)

சொக்க நாயகர் தேவியே
சுந்தரி யேசஞ் சீவியே
பக்க மேவியே
(என்றன்) பக்க மேவியே
கண் — பார்த்துரக்ஷிப்பாய் பணிக ளேவியே (வர்ம)

கண்ட கோடரி சத்திரி
கரும்புவி யில்மல ரத்திரி
மண்டு ரௌத்திரி
(பேரில்) மண்டு ரௌத்திரி
கூடல்— மலயத்துவஜ ராஜ புத்திரி (வர்ம)

ஆடும்விநோதத்தைப்பாரடி என்றமெட்டு.

இராகம்-பூரிகல்யாணி

பல்லவி

ஏனோ பராமுகம் தாயே இந்த
ஏழையைக் கண்பாராய் நீயே (ஏனோ)

அநுபல்லவி

வானோர் தினமும் வரங்கள் பெறுதற்கு
வாழ்த்திச் சூழ்கூடல் மீனாக்ஷி யேஉனக்கு (ஏ)

சரணங்கள்

ஆசையென்னும் பேய்பிடித்தது
ஆதலால்நெஞ் சந்துடித்தது
மோசநாசஞ்செய்ய வேஷங்களும்பூட்டு
மூடனானேன் காசுபொருள்வேட்டு(ஏனோ)

சூது களவு பொய் கள்வஞ்சம்
தொடரநாளுங் கருதும்நெஞ்சம்
ஆதலினாலே அவைகளைநான்மாற்ற
அநுக்ரகஞ்செய்வா யடிமையைக்காப்பாற்ற (ஏ)

வித்தைமதஞ்சில நாளுற்றேன்
வீணவம்புவாது களுங்கற்றேன்
புத்தியில்லாமல புகழுக்காசைப்பட்டு
பூமியெங்குந்திரிந்தேனே தட்டுக்கெட்டு (என்னை)

## ஈச்சுரன்மீது.

சாமிசிவ சண்முகா என்ற மெட்டு.

பல்லவி

எல்லாம் வல்ல ஈசனைப்போற்றுநெஞ்சே
உனக் - கெப்போதுமுண்டின்பம தப்பாதுதப்பாது (எ)

அநுபல்லவி

நல்லார் சொல்லும் ஞான மார்க்கமிது
நாடுவ தெல்லாருமை கூடுவதானது (எ)

சரணங்கள்

எத்தனையோ அண்ட மெண்ணமுடியாது
யாவுமாதாரமில் லாமல் வானமீது
வைத்தமகிமையோன் றேபோதுமலலாது
மானிலத்தில்வேறு வேணுமோநீஓது (எ)

காற்று நெருப்புதண் ணீர்பலசாதனம்
காலம் விளக்க மதிபாநு மீனினம்
மாற்றும் பசிக்கு வகைபெறுபோஜனம்
மானிடர்க்கேசெய்த ஜீவன ஸ்தாபனம் (எ)

எண்பத்து நான்குலக்ஷ மாம்ஜீவ பேதம்
எல்லாங்கண்ணாலே பார்க்கப் பார்க்க விநோதம்
நண்புற்று மாதரைக் கூடிடுஞ்சமேதம்
நாடுவார்க் கெட்டாதவ் வீசன் பிரசாதம் (எ)

## கரீகசா என்ற இங்கிலீஷ் நோட்மெட்டு.

### கண்ணிகள்

சோமசுந்தரா
தோத்திரஞ்செய்தேனிவ்வேளை
சொல்லைக்கொண்டுமத சுத்தமுற்றுந்தவ
எல்லையைத் தந்தருள் சித்தர்பற்றுஞ்சிவ(சோ)

காமனீறத்திக் கண்ணைத்திறந்தவா
காலனைவீழ முன்னே உதைந்தவா
காத்திரக்ஷிக்க வேணுந் தயைகொண்டு
காலிணைமேலந்நா ளுஞ்செய்வேனன் தொண்டு(சோ)

மானமில்லாத மடையரைக்கூடி
வம்புகள்தும்புகள் வாதுகள்கோடி
வஞ்சகம் பொய்கொலை மாறாட்டஞ்சூது
மார்க்கமெல்லாஞ்செய்தேன் போக்குநீஇப்போது(சோ)

அகத்தியன்முறைத் தமிழின்கூறுகள்
அறியவும்தெரியவும் ஆய்ந்துணரவும்
ஆசைமென்மேலுண்டு ஆசானும் நீயே
ஆதலினாலவை யாவையுஞ்சொலவாயே(சோ)

### ஏழுபிள்ளைகளோடு என்ற மெட்டு.

இ-தோடி தா-ரூபகம்

**கண்ணிகள்**

துவாதசாந்தப்பெரு மான்திருப்பாதத்தைச்
தோத்திரஞ் செய்வாயென் மனமே
துன்பங்கள் நீங்கிச் சுகமடை வாயுண்மை
சொன்னேன் இதுநல்ல தினமே (து)

அவாவே பிறப்பீனும் வித்தென்று வள்ளுவர்
ஆராய்ந்து சொல்லின ரன்றோ
அந்த ஞானபோதஞ் சிந்தை செய்யாம
லகற்றி விடுதலும் நன்றோ (து)

பற்றற்றான்பற்றினைப் பற்றென்றுசொன்னதும்
பாவனை யுண்மையின் மார்க்கம்
பலிக்கும் வழியை விளக்கியதன்றோ
பகர்ந்தவெல் லாமவர் தீர்க்கம் (து)

சற்றுஞ் சந்தேச மில்லை குறளாகிய
சாத்திர மொன்றுமே போதும்
சர்வ கலாசார ஞானந் தருமது
தன்னைப் படிப்பாயெப் போதும் (து)

### பாடுபெலாலா என்ற சிங்கள மெட்டு.

**கண்ணிகள்**

அந்தரரோடு இந்திரன் போற்றும்
அரனேபரனே சோமசேகரனே

கந்தனையளித்த கைலைவானவனே
கருணையுடைய அறிவாகரனே (அந்த)

மாயையின்கூட்டம் வந்துபோராட்ட
மாக்கியதாலடைந் தேன்வாட்டம்
நீயொருஓட்ட மாயவைகோஷ்டம்
நீக்கவராவிடிலோ திண்டாட்டம் (அந்த)

பாலனென்மீது பராமுகமேது
பாரிலெனைக் கைவிடலாகாது
காலன்வருகுவா னெனஅஞ்சினேன்
கைதூக்கியாள வேணுமிப்போது (அந்த)

ரத்தேனிக்கா என்ற இந்துஸ்தான் மெட்டில்

## முருகப்பிரான்மீது

தந்தா ளுன்பா தந்தா னின்றே
சரவணபவ வேலவா (தந்தா)

மந்தா நிலந்தரும் மலயமலைவரும்
மாமுனி கும்பனுக் கேகுருவாகிய
மரகத மயில் முருகனே (தந்தா)

பிரணவத்தைச்சுட்டி பிரமனைமுன்குட்டி
பிறங்கலிடுக்கில் விலங்கிலேபூட்டிய
பெருமை செறியு மொருவனே (தந்தா)

வாழ்த்தினர்களேனும் வைதனர்களேனும்
வந்துவினைந்தன ரென்றுநலம்பெற
வாழ வைக்குங்கருணாகரா (தந்தா)

## சுந்தரேசர்மீது

துன்பால் கொண்டேன் என்பால் வந்தாள்
சோம சுந்தரா சாமி (துன்)

தென்பாலும் பாண்டி தேசம்வாழ வேண்டி
சிந்தை மகிழ்ந்திடு தொண்டர் பதம்பெறத்
திரு வருள்புரி பரமனே (துன்)

வந்திக்குமாட்பட்டாய்மண்ணுஞ்சுமந்திட்டாய்
வாதவூ ராளியின் வாசக ஆசையில்
வாஞ்சைகொண்டது வுந்தான் பொய்யோ (துன்)

கரிக்குருவி முத்தி கரையேறிய சித்தி
காட்டுந் திருவிளை யாட்டுண்மையில்லையோ
கருதி யுரைசெய் விரைவிலே (துன்)

## மீனாக்ஷியம்பிகைமீது.

நம்பே னென்று லும்பார் கண்ணால்
காணுன தடி பணியவே

சம்புவோடு காக்ஷி தந்தருள்மீனாக்ஷி
சத்திய நித்திய வுத்தம நற்குண
சாரம் பொருந்துமுன் மகிமையை (நம்)

மதியில்லாத மூடன் வஞ்சன்குடி கேடன்
மாறுட்டனென் றென்னை நீயோட்டில் வேறினி
வாழ்வெனக் கேதிலை ஆதலால் (நம்)

தத்துவத்தி னீதி தாராளமா ஓதி
தர்க்கந் தொடுக்கும் விதத்தின னல்லது
சாகை தெரியே னாதலால் (நம்)

## விஷ்ணுமீது

தப்பா திப்போ செப்பா யப்பா
சாமி திருமா லழகனே (தப்)

மப்பான மாலை மாடுகூட்டும் வேலை
வந்து புரிகின்ற சொந்தமிலை எந்த
வகை யுரியது விரைவிலே (தப்)

மாவலி பால் தானம் வாங்கியுமுன் னீனம்
மானமதெண்ணுமல் போனது மேனது
வருத்தறிய இத் தினத்திலே (தப்)

கன்னக்கோலைத்தொட்டு கள்ளர்கள் கும்பிட்டு
கண்ணன் துணையென முன்னேயவர்க்குக்
களவுப லித்திடுங் காரணம் (தப்)

வாகன மாடாடு வரிசை பலவோடு
மங்கள மாகவே வைகை நதிக்குள்ளே
வருஷந் தோறும் வருவதேன் (தப்)

## மீனாக்ஷியம்பிகைமீது.

இன்னும் வரக்காணேனே என்ற மெட்டு.

இ-பாசு தா-ஆதி.

பல்லவி

ஏழையென்னைநாடி யாள்வாயே உன்னையல்லாமல்
யார்துணை நீயே மொழிவாயே அன்புள்ள தாயே (ஏ)

அநுபல்லவி

ஊழையுமுப்பக்கங் காண்போர் ஓதுமதுராபுரியில்
வாழுமலயத்துவஜ மன்னன்மகளேவிரைவில் (ஏ)

சரணங்கள்

வாதபித்தங்கோழைகூடி வாசஞ்செய்யுந்தேகம்வாடி
மேதினியிலேதிண்டாடி வீடுமுன்னன் பாகத்தேடி (ஏ)

நன்மையொன்றும்நாட்டமில்லேன் நாளுமெய்யாமுண்மைசொல்
புன்மைகளல்லாதுகல்லேன் போவென்றதேபுத்தியில்லேன்[லேன்
பிள்ளைகுற்றந்தாய்பொறுத்துப் பேணுவதுலகநீதி
தள்ளியகற்றாதேபோற்றி சாற்றினேனீபோதம்ஓதி (ஏ)

சம்போ கங்காதரனே என்ற மெட்டு.

இ-தன்யாசி தா-ஆதி.

பல்லவி

என்னைநீயேகாப் பாற்று இல்லையேலார்துணை
இதற்குப்பதிலேனுஞ்சாற்று (என்)

அநுபல்லவி

அன்னை மீனாக்ஷியுனக் கடிமையென்குலமல்லோ
அநுக்ரகஞ்செய்யாமல் விடுப்பதும்தீமையல்லோ(என்)

சரணங்கள்

பொல்லாதபிள்ளை யானாலும் குற்றம்
பொறுப்பாரென்பாரே புவிமேலும்
கல்லாத நிலைமையால் காதகனன்பிழை
கருதிச்செய்துநின்றாலும் கிருபைவைத்தருகழை(என்)

நாளுமுன்னை வணங்கினேனே அன்பாய்
நாடிமுழுதும் நம்பினேனே
வேணுமெமனும் என்னை வீரனென்றகமஞ்ச
விடவேணுமிதுததி வேதனுமடிகெஞ்ச(என்)

நடந்ததென்ன சொல்லம்மா என்றமெட்டு,

பல்லவி

வரந்தர வேணுமம்மா நீயே
வாழ்த்துவேன் மதுரை மீனாக்ஷியே தாயே(வர)

அநுபல்லவி

பரந்தகொடுமையினால் பலபலவினைக்கு
பாடுபட்டுவருந்தும் பாலகனெனக்கு(வர)

சரணங்கள்

காசிக்ஷேத்திரங்கதிர் காமமுமலைந்து
கந்தனே கதியென்று கனதுதிமொழிந்து

வீசநேரம் விடாமல் விரதமுமிருந்து
வேதையடைந்தேனத ஞாலேலநீயுவந்து(வர)

தெரிந்துந் தெரியாமலுந் தினங்குற்றங்கோடி
செய்பவனேனுமுன்றன் திருவடிபாடி
விரிந்தபுகழ்மொழியும் விதத்தைநீநாடி
விருப்பம்நிறைவேறிட மதித்தருள்கூடி(வர)

கதிரொளி வீசும்நவ மணிக்கிரீடதரியே
கள்ள அழகருஞ்சீர் கருதுசோதரியே
மதிமுடிச் சொக்கநாதன் மகிழுஞ்சுந்தரியே
மாநிலப்பிராணிகளைக் காக்குமீஸ்வரியே(வர)

பித்தனானவும் என்ற மெட்டு.

கண்கணிகள்

தத்துவ மீனலோசனி
தயவுசெய் யருள்புரிஇனி
தாரணி மீதினி லேதுணை வேறிலை
ஆதலி னாலடி யேன்வினை தீருயர்(தத்து)

சத்துவ குண சங்கரி
தருமரூப சுதந்தரி
சஞ்சலம் நெஞ்சினில் மிஞ்சியபஞ்சையை
யஞ்சலெனுஞ்சொல் புகன்றருள் ரஞ்சகி(தத்து)

சொக்க நாயகர் பாரியே
சுந்தரி கவு மாரியே
சுத்தமனத்துள் நினைத்து மலர்ப்பதம்
நித்த முரைப்பவர் சித்திபெறச்செயும்(தத்து)

## சுந்தரேசர்மீது

ஆயிலோலம் என்ற இந்துஸ்தான்மெட்டு.

மாறியாடிய மணியே சொக்கேசா
மகத்துவம் பொருந்திய மதுரையில்வாசா
மாதவமுனி வோரமரர்கள் மாலயனுடு
வாழ்த்துமொலி மேற்பொலிய (மாறி)

கூறியழுதபிள்ளை குறைகளைநீக்கு
கொஞ்சமேனுந் துன்பின்றி நலஞ்சுகமுண்டாக்கு
கோலமாமலர் போலுமாமிரு சேவடிதுணை
கோரினேனுன் நேரில்வாவா (மாறி)

வேடன்மிசைந்தஎச்சில் விரும்பியுண்டவனே
விளையாட்டுக்காகவேடன் வேடங்கொண்டவனே
வேறொருமொழி கூறிலனினி மாறதுபுரி
யாதெனை நீ யாளவாவா (மாறி)

நாவினிற் என்ற வர்ணமெட்டு.

இ-அமீர்கல்யாணி தா-சாப்பு.

கண்ணிகள்

கிருபாகராஎன்மே லெனிந்தக்கோபம்
கெதிவேறிலையருள் வாயிலையெனில்பாபம்
திருமாதுகலைமாது சேர்செல்வஞ்சூழும்
திவ்யமதுரையென்னுந் தேசத்தில்வாழும் (கி)

அந்திப்பிறையணிந் தாடுமுல்லாசா
அடியார்களுக்கின்ப மளிக்குமன்னேசா
சிந்திப்போருள்ளத்தில் தீபப்ரகாசா
தேவிமீனம்பிகை சேருஞ்சொக்கேசா (கி)

சூதாடினேன்பொய் சொன்னேன்கள்ளுங்குடித்தேன்
துடுக்காகப் பெரியோரைப் பழிப்புரை படித்தேன்
ஆதாரம் விலமாத ரடியென்றுபிடித்தேன்
அவதியடைந்துடைந் துன்னருள்தேடித்துதித்தேன் (கி)

அல்லியேன்னும் என்றவர்னமெட்டு.

இ-வராளி தா-ரூபகம்

பல்லவி

ஏழைஎன்னை யாளவேணு மேகருணைகொண்டு
என்முகத்தைப் பார்க்கவேணு மேஈசாசொக்கேசா (ஏ)

அநுபல்லவி

இந்திரனு மந்தரரும் வந்துதொழும் சுந்தரனே (ஏ)

சரணங்கள்

மாழைமணிமன்றில்நாடும் வாறில்லாமல்மாறியாடும்
மதுரைவெள்ளியம்பலவா வந்துன்னைவணங்கிப்பாடும் (ஏ)

வேதனோடு காமனேமனும் என்மேலன்பின்றி
வேதை செய்கின்றார் முன்னும் பினும்
வேறுதுணையாரெனக்கு வேலனுமானன்பகைக்கு
வீசநேரம் வீணுகாமல் வேணுமுன்னருளின்றைக்கு (ஏ)

அருமைமகளேசொல்லிப்போது என்ற மெட்டு.

இ-ஆனந்தபைரவி தா-ரூபகம்

கண்ணிகள்.

மருந்தொன்றுகொடுசொக்கநாதா சொக்கநாதா
மானிடப்பிணிதீர்க்கும் வைத்தியநாதா (மரு)

பருந்தும்காகமும்தின்னும் பாழுடலுக்கு
பாடுபட்டலைந்திடும் பாதகன் எனக்கு (மரு)

போதையின்இலக்கணசந்தி சேர்ந்தசந்தி
பொருந்தும்ஐவிகுதியாம் புணர்ப்பென்பர்முந்தி (மரு)

ஆதலினால்போதம் அறிவென்றுமதுஉண்டு
அவதிநான் அடைகிறேன் அதைநீக்க அருள்கொண்டு (மரு)

ஓதச்சொல்லும்நீயேதந்தாய் நீயேதந்தாய்
உண்மையெனவேவேத ஆகமமொழிந்தாய் (மரு)

ஏதச்சொல்அதன்பொருள் இன்னவாவென்று
எனக்குவிளங்கச்சொல் இசைவுடனின்று (மரு)

சூரசம்மாரனே என்றமெட்டு.

பல்லவி

அம்பிகைஅன்னையே ஆதியாகியஜோதிநாயகி (அம்)

சரணங்கள்

நம்பினேனுனைம்புவியில் நாடியேழையையாளவேணும்நீ (அம்)
செய்பிழையைத்தாய்பொறுத்தல் செப்புமிப்புவிதிக்கெனக்குநீ (அம்)
கைதவறச்செய்குவையேல் காணுமோர்துணையேதுஓதநீ (அம்)
அண்டிவருதொண்டர்களை ஆளவேணுமலோசகாயிநீ (அம்)

## என்னசொல்லுவாய்மனமே என்றமெட்டுப்போக்கு.

இ-புன்னாகவராளி தா-ஆதி.

கண்ணிகள்

மதுரை வளத்தைப் பாடுவோம் மீனாக்ஷிசுந்தரரை
வாழ்த்தித் தினங்கொண் டாடுவோம் வைகைநதிசூழ் (ம)

மலையத்துவஜ மகிபற்கரசு
மகுடப்பெருமை மகளுக்கருளும் (ம)

வானவாமுமுகில் வாரிநீர்பருகி
மாதமூணுமழை மாரிநேர்பொழியும் (ம)

வர்த்தகத்திறமை கைத்தொழிற்புதுமை
வித்தகற்பெருமை மெத்தவுற்றிலகும் (ம)

வாஞ்சைகொண்டுதமி ழாய்ந்திடும்புலவர்
சேர்ந்திருந்துமுனம் மூன்றுசங்கம்வளர் (ம)

மறுமைப்பயனை அடைதற்குரிய
மனிதற்கனல் வரமுற்றருளும் (ம)

வரன்சோதனைகள்செய் யுரஞ்சாரடியவர்
தாம்பார்தெரிவகை பரஞ்சோதிபுகலும் (ம)

வற்கடகஷ்டம கற்றிவசிப்பவர்
நற்சுகமுற்றிட நெற்பொலிவைத்தரும் (ம)

மாதவமேவிய ஞானியர்யோகியர்
தேவர்கள்நாகர்கள் வாழவவாவுறும் (ம)

மலையரன்வனவரன் மதிலொடுபுனலரன்
வகைகளிலொருகுறை இலையெனநிலைபெறும் (ம)

மந்தகத்தெழில் யானைகளும்பல
சித்ரமுற்றொளிர் தேரினமுங்குதி
பெற்றடுத்திடு மாவினமும்படை
முற்றெடுத்திடு சேனைகளும்பொலி (ம)

மட்டுப்பொற்பைப் பெற்றுக்கிட்டிய
சொர்க்கத்துக்குப் பக்கத்தெட்டிய (ம

வாணுதல்பொற்சிலை யாகுகயற்கணி
மீதொருபத்தனை நாளவள்மெச்சிட
வாரியுதித்திட லாமமுதைப்பொரு
மாறுபிள்ளைத்தமி ழோதியடுத்திடு (மது

வாழி

கலிவிருத்தம்.

சங்க மூன்று தழுவிய கூடலில்
திங்க ளொன்று திருமுடி சூடிய
மங்க ளந்திகழ் மாது கயற்கணி
அங்க ணிந்நூற் கருள்செய்வ ளுமரோ.

முற்றிற்று.

174473

உ

குமரன் றுணை.

# Notice.

---

## MANONMONY VILAS PRESS,

***Northmasi Street,***

***MADURA.***

இதனாற் சகலகனதனவான்களுக்குந் தெரிவிப்பதுயாதெனில்:

தமிழிலும், இங்கிலீஷிலும் அச்சிடவிரும்பும் பட்டா முச்சலிக்கா, ரசீது, முதலிய வேலைகளும், புத்தகதினுசுகளும், லெட்டர்பாரம், உண்டியல், குறிப்பு பேரேடு, முதலிய கணக்குப் புத்தகங்களும், கலியாணப்பத்திரிகை கார்டு, கவர், நாடக நோட்டீஸ் முதலிய பத்திரிகை தினுசுகளும் குறைந்த சார்ஜுக்கு குறித்த நேரத்திற்குள் செய்துகொடுக்கக்கூடும். ஆதலால் அன்பர்கள் யாவரும் அவரவர் விரும்பும் அச்சு வேலைகளைக் கொடுக்கும்படி விரும்புகிறேன்.

இங்ஙனம்,

K. மாயாண்டிபிள்ளை,

மனோன்மணி விலாசம் பிரஸ்,

வடக்குமாசிவீதி

மதுரை.

உலகெங்கும் புகழ் ஓங்கப்பெற்ற T. T. சங்கரதாஸ் சுவாமி அவர்களால் இயற்றப்பெற்ற பரமானந்தப் பக்திரஸக்கீர்த்தனை இரண்டாம்பாகம் அச்சிலிருக்கிறது அதிசீக்கிரம்வெளிவரும்.

20A
15-12